2. தகவல் கோரல்

(அ) செய்யாறு கூட்டுறவு கரும்பு விவசாயிகள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தின் பல பகுதிகளில்...

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவராகச் சொல்லுங்கள், திரு. ஜி.கே.மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு கூட்டுறவு விவசாயிகள் பிரச்சினை பற்றி, கரும்பு விவசாயிகள் பிரச்சினை பற்றி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன். (குறுக்கீடு) நாளை என்னுடைய அறைக்கு வாருங்கள், பார்க்கலாம். திரு. புகழேந்தி.

(ஆ) நாகப்பட்டினம், கீச்சாங்குப்பம் மீனவர் கிராம மக்கள் பிரச்சினை

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 21 ஆம் தேதி நாகப்பட்டினம், கீச்சாங்குப்பம் மீனவர் கிராமத்திலே வசிக்கக்கூடிய மக்கள்மீது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புதான், அறைக்கு வாருங்கள், அதைப்பற்றி பேசுவோம். உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன்.

(இ) வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் சமுதாயத்தினர்

திரு. ஜே.ஹேமச்சந்திரன்: Speaker Sir, வாணியம்பாடி காவல் நிலையத்திலே குறவர் சமுதாயத்தைச் சார்ந்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது. திரு. ஞானசேகரன்.